8. வெப்பம் ஒரு பொருளிலிருந்து மற்ற பொருளுக்கு ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும்போது பரவுவது

A) வெப்பக் கடத்தல்

B) வெப்பச் சலனம்

C) வெப்பக் கதிர்வீசல்

D) இவை அனைத்தும்

9. பகல்நேரத்தில் கடற்கரையில் நிலம் நோக்கி வீசும் காற்று

A) நிலக்காற்று B) கடல்காற்று

C) பருவக்காற்று D) தலக்காற்று

10. வெப்பநிலை என்ற அளவில் இதை குறிப்பிடலாம்

A) பொருள் ஒன்று எந்த அளவு சூடாக உள்ளது என்பதை

B) பொருள் ஒன்று எந்த அளவு குளிர்ச்சியாக உள்ளது என்பதை

C) A சரி B தவறு

D) A மற்றும் B சரி

11. இவற்றில் பொருத்தமற்ற கூற்று எது?

A) வெப்பம் என்பது ஒருவகை ஆற்றல்

B) வெப்பநிலை உயர்வு பொருளின் தன்மையைச் சார்ந்தது

C) வெவ்வேறு நிறையுள்ள ஒரே பொருளுக்குச் சமமான வெப்பம் தரப்படும் போது வெப்பநிலை உயர்வு சமமாக அமையும்

D) இவற்றில் எதுவுமில்லை

12. இவற்றில் பொருத்தமான இணையைக் காண்க.

A) வெப்ப ஏற்புத்திறன் - $Jkg^{-1}k^{-1}$

B) தன் வெப்ப ஏற்புத்திறன் - $Jk^{-1}$

C) நீரின் தன்வெப்ப ஏற்புத்திறன் - $180Jkg^{-1}k^{-1}$

D) பாதரசத்தின் தன்வெப்ப ஏற்புத்திறன் $-140Jkg^{-1}k^{-1}$

13. **கூற்று** (A): நீரின் தன்வெப்ப ஏற்புத்திறன் பாதரசத்தின் தன்வெப்ப ஏற்புத் திறனை விட சுமார் 30 மடங்கு அதிகம்

**கூற்று** (B): 1 கி.கி. நீரை 1k வெப்பநிலை உயர்த்தத் தேவைப்படும் வெப்பத்தைக் கொண்டு 30 கிகிராம் பாதரசத்தின் வெப்ப நிலையை 1k உயர்த்தமுடியும்

A) A சரி B தவறு

B) A தவறு B சரி

C) A மற்றும் B சரி

D) A மற்றும் B தவறு

14. 5 கி.கிராம் நிறையுள்ள பாதரசத்தின் வெப்பநிலையை 10K உயர்த்தத் தேவைப்படும் வெப்பத்தின் அளவைக் கணக்கிடுக.

A) 700 J　　B) 7000 J

C) 1400 J　　D) 1800 J

15. இவற்றில் பொருத்தமற்ற கூற்று

A) வெப்ப ஏற்புத்திறன் = வெப்பநிலையை 1K உயர்த்த தேவைப்படும் வெப்பம்

B) வெப்ப ஏற்புத்திறன் = நிறை × தன்வெப்ப ஏற்புத்திறன்

C) தரப்படும் மொத்த வெப்பம் = நிறை × வெப்பநிலை உயர்வு

D) $Q = MS\theta$

16. எந்த ஒரு மாறா வெப்பநிலையில் திரவப் பொருளானது, அதன் வாயு நிலைக்கு மாறுகிறதோ அவ்வெப்பநிலை அத் திரவத்தின் .................. எனப்படும்.

A) உருகுநிலை

B) கொதிநிலை

C) பதங்கமாதல்

D) குளிர்தல்

17. ஒரு பொருளைக் குளிர்விக்கக்கூடிய மிகக்குறைந்த வெப்பநிலையையே கெல்வின்........................... குறிப்பிட்டார்.

A) தனிச்சுழிவெப்பநிலை　　B) Ok என

C) A மற்றும் B சரி　　D) A சரி B தவறு

18. இவற்றில் தனிச்சுழி வெப்பநிலை பற்றிய பொருத்தமற்ற கூற்று எது?

A) தனிச்சுழி வெப்பநிலையில் மூலக்கூறுகளின் இயக்கம் முழுவதுமாக நின்றுவிடும்

B) பொருளில் வெப்ப ஆற்றல் சுழி ஆகும்

C) தனிச்சுழி வெப்பநிலை என்பது அடையக்கூடிய மிகக்குறைந்த வெப்பநிலை

D) தனிச்சுழி வெப்பநிலை $273^0k$

19. கூற்று (A): பொருளொன்றைத் தொடர்ந்து குளிர வைத்தால் அதன் வெப்பநிலை தொடர்ந்து குறையும்

கூற்று (B): ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலைக்குக் கீழ் பொருளைக் குளிரவைக்க இயலாது.

A) A சரி B தவறு

B) A மற்றும் B சரி

C) A தவறு B சரி

D) A மற்றும் B தவறு

20. அனைத்து பொருட்களும் தனிச்சுழி வெப்பநிலையை விட அதிகமான....................... வெப்பக் கதிர்வீச்சை உமிழும்

A) குறிப்பிட்ட வெப்பநிலைகளிலும்

B) எல்லா வெப்பநிலைகளிலும்

C) சுழிநிலை வெப்பநிலைகளிலும்

D) பகுதியளவு வெப்பநிலைகளிலும்

21. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) கெல்வின் k = செல்சியஸ் அளவு + 273

B) செல்சியஸ் அளவு ($^0C$) = கெல்வின் அளவு (k) - 273

C) A மற்றும் B தவறு

D) A மற்றும் B சரி

22. வெப்பம் தரப்படும்போது வாயுவின்

A) அழுத்தம் மட்டும் மாறுபடும்

B) கன அளவு மட்டும் மாறுபடும்

C) அழுத்தம் மற்றும் கன அளவு இரண்டும் மாறுபடும்

D) அழுத்தம் மற்றும் கனஅளவு இரண்டும் மாறாது

23. வாயுக்கள் விரிவடையும்போது இவற்றில் எது மாறுபடுகின்றன?

A) கன அளவு　　B) அழுத்தம்

C) வெப்பநிலை　　D) இவை அனைத்தும்

24. இராபர்ட் பாயில் பற்றிய தவறான கூற்று எது?

A) பாயில் விதியை தருவித்தவர்

B) முதல் நவீன வேதியியலார்

C) முதல் பருப்பொருளின் துகளுக்கு அணு என்ற சிறப்புப்பெயர் இவரது கருத்துப்படி தரப்பட்டது

D) இயற்பியல் மற்றும் வேதியியல் விஞ்ஞானி

25. வெப்பநிலை மாறாமல் உள்ளபோது குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தம் அதன் கன அளவிற்கு எதிர்த் தகவில் அமையும்

A) அழுத்த விதி

B) கன அளவு விதி

C) சார்லஸ் விதி

D) பாயில் விதி

26. V/T = மாறிலி

A) அழுத்த விதி

B) அழுத்தத்திற்கான விதி
C) கன அளவு விதி
D) பாயில் விதி

27. ஜாக்குயிஸ் சார்லஸ் பற்றிய சரியான கூற்று எது?
A) கணித அறிஞர் balloonist என்ற சிறப்புப் பெற்றவர்
B) முதல் ஹைட்ரஜன் பலூனை வடிவமைத்தவர்
C) திரவமானியைக் கண்டுபிடித்தவர்
D) இவை அனைத்தும்

28. கீழ்வருவனவற்றுள் $4180 Jkg^{-1}k^{-1}$ தன்வெப்ப ஏற்புத்திறன் மதிப்பு கொண்ட திரவத்தினை தேர்ந்தெடுக்க
A) பாதரசம் B) மண்ணெண்ணெய்
C) நீர் D) தேங்காய் எண்ணெய்

29. காந்தத்தின் எதிரெதிர் துருவங்கள் ஒன்றையொன்று
A) விலக்குகின்றன
B) ஈர்க்கின்றன
C) மின்னூட்டம்
D) இவை அனைத்தும்

30. இவற்றில் சரியான கூற்று எது?
A) மின்காந்த தொடர்வண்டிக்கு மிதக்கும் தொடர் வண்டி என்று பெயர்
B) மின்காந்த தொடர் வண்டியில் சக்கரம் கிடையாது
C) தண்டவாளத்தில் காந்தங்கள் பொருத்தப் பட்டுள்ளது
D) இவை அனைத்தும்

31. காந்தத்தில் ஈர்ப்புச் சக்தி அதிகமுள்ள பகுதி எது?
A) இரு முனைகளிலும்
B) நடுவில்
C) காந்தம் முழுவதும்
D) ஒருமுனையில்

32. மாலுமிகளுக்கு திசைகாட்டும் கருவிகளை அளித்தவர்கள்
A) இந்தியர் B) ஐரோப்பியர்
C) சீனர் D) எகிப்தியர்

33. நிலைக்காந்தங்கள் செய்யப் பயன்படும் பொருள்
A) தேனிரும்பு B) எஃகு
C) பித்தளை D) வெண்கலம்

34. காந்தக் கேடயமாக பயன்படும் பொருள்
A) மரம் B) தேனிரும்பு
C) கண்ணாடி D) காகிதம்

35. பின்வருவனவற்றில் எது மின்காந்த இயல் அற்றது?
A) ஆல்பாக் கதிர்கள்
B) x - கதிர்கள்
C) காமாக்கதிர்கள்
D) புற ஊதாக் கதிர்கள்

36. இவற்றில் பொருத்தமான கூற்று எது?
A) காந்தத்தைச் சுற்றிலும் அதன் விசை உணரப்படும் பகுதி காந்தவிசை எனப்படும்
B) இரும்புத் துகள்களால் ஒருங்கமைக்கப்பட்டு உருவாகும் கோடுகள் காந்தபுலம் கோடுகள் எனப்படும்
C) காந்தப்புலம் எண்மதிப்பும் திசையும் கொண்ட அளவாகும்
D) இவை அனைத்தும்

37. இவற்றில் தவறான கூற்று எது?
A) வழக்கமாக புலக்கோடுகள் காந்தத்தின் வடமுனையில் தொடங்கி தென்முனையில் முடிவதாக கருதப்படும்
B) காந்தத்தின் உள்ளே புலக்கோடுகள் தென்முனையில் தொடங்கி வடமுனையில் முடியும்
C) காந்தப்புலக் கோடுகள் மூடிய வளைவாக் கோடுகளாகும்
D) காந்தப்புல கோடுகள் ஒருபோது ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது

38. மின்னோட்டம் ஒரு திசையில் பாயும்போது, (xலிருந்து yக்கு) காந்த ஊசியின் வடமுனை எந்த திசை நோக்கி விலகும்?
A) வடக்கு திசை
B) கிழக்கு திசை
C) மேற்கு திசை
D) தெற்கு திசை

39. கூற்று (A) : உலோகக்கடத்தி வழியே பாயும் மின்னோட்டம் அதனைச் சுற்றிக் காந்தப்புலத்தை உருவாக்கும்
கூற்று (R) : மின்னோட்டம் பாய்வதால் தோன்றும் காந்தப்புலத்தின் திசை, மின்னோட்டத்தின் திசையைச் சார்ந்தது
A) (A) மற்றும் (R) சரி. ஆனால் (R) வானது (A)க்கான சரியான விளக்கமல்ல
B) (A) மற்றும் (R) சரி. (R) வானது (A)க்கான சரியான விளக்கம்
C) (A) சரி B தவறு
D) (A) தவறு ஆனால் B சரி

40. "காந்தமும் மின்னோட்டம் பாயும் கடத்தியின்மீது விசையை செலுத்தும்" எனக் கூறியவர்
A) ஓயர்ஸ்டெட்
B) ஜார்ஜ் சைமன் ஓம்
C) ஆம்பியர்
D) வோல்டா

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. B | 2. C | 3. C | 4. C | 5. B | 6. D | 7. D | 8. A | 9. B | 10. D | 11. C | 12. D |
| 13. C | 14. B | 15. C | 16. B | 17. C | 18. D | 19. B | 20. B | 21. D | 22. C | 23. D | 24. C |
| 25. D | 26. B | 27. D | 28. C | 29. B | 30. D | 31. A | 32. C | 33. B | 34. B | 35. A | 36. C |
| 37. A | 38. B | 39. A | 40. C | | | | | | | | |

# ஒளியியல் R.Ajith

1. எண்ணெய் தடவிய தாள்
A) ஒளிபுகும் பொருள் B) ஒளிபுகாப் பொருள்
C) ஒளி கசியும் பொருள் D) இவை அனைத்தும்
2. நிழல்கள் உருவாக இது தேவைப்படுகிறது
A) ஒளிமூலம் B) ஒளிபுகாப் பொருள்
C) திரை D) இவை அனைத்தும்
3. இவற்றில் சரியான கூற்று எது?
A) ஒளியானது நேர்கோட்டில் செல்கிறது
B) ஒளி நேர்கோட்டில் செல்வதால் நிழல் ஏற்படுகிறது
C) ஒளியின் நேர்கோட்டு இயக்கத்தால் கிரகணம் ஏற்படுகிறது
D) இவை அனைத்தும்
4. சூரிய கிரகணத்தில் பூமியானது
A) ஒளிமூலம் B) ஒளிபுகாப்பொருள்
C) திரை D) இவை அனைத்தும்
5. சந்திர கிரகணத்தில் சந்திரன்
A) ஒளிபுகாப் பொருள் B) திரை
C) ஒளிமூலம் D) இவை அனைத்தும்
6. நீரின் ஒளியின் திசைவேகம், காற்றின் திசைவேகத்தில் 3/4 பங்கு, நீரில் ஒளிவிலகல் எண் யாது?
A) 4/3 B) 3/4
C) 1/4 D) 0
7. ஒளியின் எந்த நிறம் நீண்ட அலை நீளம் கொண்டுள்ளது?
A) ஊதா B) பச்சை
C) மஞ்சள் D) சிவப்பு
8. நிறப்பிரிகை நிகழ்வில் அதிகமாக விலகலடையும் நிறம்
A) சிவப்பு B) பச்சை
C) நீலம் D) ஊதா
9. ஒளியானது பொருளின் மீது விழுந்த பிறகு திருப்பி அனுப்பப்படும் நிகழ்வு
A) குவிக்கற்றை B) விரிக்கற்றை
C) எதிரொளித்த D) இணைக்கற்றை
10. ஒளி எதிரொளிப்புத் தளத்தில் படுகின்ற ஒளிக்கதிர்
A) எதிரொளிப்புக் கதிர் B) குத்துக்கோடு
C) படுகதிர் D) படுகோணம்
11. ஏழு நிறங்களின் சரியான தொகுதி
A) VIBYGOR B) VIGBYOR
C) VIYBGOR D) VIBGYOR
12. நிறைமாலையை கண்டறிந்தவர்
A) கலிலியோ கலிலி B) சர் ஐசக் நியூட்டன்
C) பாஸ்கல் D) ஆர்க்மிடீஸ்
13. படுகோணம் அதிகரிக்கப்பட்டால் விலகு கோணம்
A) அதிகரிக்கும் B) குறையும்
C) நிறப்பிரிகையாகும் D) எதிரொளிப்பாகும்
14. தெளிவுக்காட்சியின் மீச்சிறு தொலைவு
A) 25 செ.மீ. B) 30 செ.மீ.
C) 35 செ.மீ. D) 40 செ.மீ.
15. இவற்றில் சரியான கூற்று எது/ எவை?
i. ஆடியைப்போன்று நன்கு பளபளப்பாக்கப்பட்ட பரப்புகள் அதன்மீது விழும் பெரும்பான்மை ஒளியை எதிரொளிக்கும்
ii. படுகதிர், எதிரொளிப்புக்கதிர், படுபுள்ளியில் எதிரொளிப்புத் தளத்திற்கு வரையப்பட்ட செங்குத்துக்கோடு ஆகியவை எதிரெதிர் தளத்தில் அமையும்
iii. படுகோணமும் எதிரொளிப்புக் கோணமும் சமம்
A) மூன்றும் சரியானவை
B) i மற்றும் ii சரியானவை
C) ii மற்றும் iii சரியானவை
D) i மற்றும் iii சரியானவை
16. இவற்றில் எது குவி ஆடியைக் குறிக்கும்?
A) பளபளப்பான வளைபரப்பை கொண்ட ஆடி
B) வளைபரப்புடைய ஆடி
C) வெளிநோக்கிய எதிரொளிக்கும் வளைபரப்பைக் கொண்ட ஆடி
D) உள்நோக்கிய எதிரொளிக்கும் வளைபரப்பை கொண்ட ஆடி
17. கரண்டியை எவ்வாறு கருதலாம்?
A) கோளக ஆடியாக B) குழி ஆடியாக
C) குவி ஆடியாக D) இவை அனைத்தும்
18. இவற்றில் தவறான கூற்று எது?
A) கோள ஆடியின் எதிரொளிக்கும் பரப்பின் மையப்புள்ளி ஆடி விளிம்பு எனப்படும்
B) ஆடி எந்தக் கோளத்தின் பகுதியோ, அந்தக் கோளத்தின் மையம் ஆடியின் வளைவு மையம் எனப்படும்
C) கோளக ஆடி எந்தக் கோளத்தின் பகுதியோ அதன் ஆரம் ஆடியின் வளைவு ஆரம் எனப்படும்
D) கோளக ஆடியின், ஆடி மையம் மற்றும் வளைவு மையம் ஆகியவற்றின் வழியே செல்லும் கற்பனையான நேர்கோடு ஆடியின் முதன்மை அச்சு எனப்படும்
19. இவற்றில் எங்கு குழியாடி பயன் படுவதில்லை?
A) வாகனங்களின் பக்கவாட்டில் பொருத்தப்பட்ட கண்ணாடி
B) தெருவிளக்குகள்
C) சூரிய அடுப்புகளில்
D) வாகனங்களின் முகப்பு கண்ணாடி
20. **கூற்று** (A): நீர் நிறைந்த தொட்டி அல்லது குளம் ஒன்றின் அடிபரப்பு சற்று உயர்ந்ததுபோல் தோன்றும்.
**கூற்று** (R): ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்தினுள் ஒளி செல்லும் போது அதன் வேகம் மாறுபடுவதே ஒளி விலகலின் காரணமாகும்
A) (A) மற்றும் (R) சரி. மேலும் (R)வானது (A)க்கான சரியான காரணமாகும்
B) (A) மற்றும் (R) சரி. ஆனால் (A) ஆனது (A)க்கான சரியான காரணமில்லை

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி

21. ஒளி ஊடுருவும் ஒரே ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்தினுள் செல்லும்போது அதன் ........................ மாறும் நிகழ்வு ஒளிவிலகல்

A) தொலைவு B) பிம்பம்

C) திசை D) மையம்

22. கீழ்க்கண்டவற்றில் எது/எவ்வ சரியான கூற்று ஆகும்

i. இரண்டு பரப்புகளிடையே அமைந்த ஒளி ஊடுருவத்தக்க ஊடகம் லென்ஸ் எனப்படும்

ii. இருபுறமும் வெளிநோக்கிப் புடைத்துள்ள பரப்புகளைக் கொண்ட லென்ஸ் குழிலென்ஸ்

iii. ஒளிக்கதிர்களை விரிவடையச் செய்வதால் விரிக்கும் லென்ஸ் எனப்படும். பொதுவாக குவி லென்ஸ் எனப்படும்

A) மூன்றும் சரியானவை B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது D) iii மட்டும் சரியானது

23. இவற்றில் எந்த குடும்பத்தின் நிலையில் மாய, நேரான பிம்பம் தோன்றும்

A) முதன்மை குவியம் Fஇல் உள்ளபோது

B) Fக்கும் 2Fக்கும் இடையில் உள்ளபோது

C) பொருள் வைக்கப்பட்டுள்ள லென்சின் அதே புக்கத்தில் உள்ளபோது

D) ஈரில்லாத் தொலைவில் உள்ளபோது

24. இவற்றில் பொருத்தமற்ற கூற்று எது?

A) பிம்பத்தின் அளவுக்கும் பொருளின் அளவுக்கும் உள்ள தகவு லென்சின் உருவாக்கம் எனப்படும்

B) ஒளி குவிக்கப்படும் அல்லது விரிக்கப்படும் அளவு லென்சின் ஒளிமையத்தால் குறிக்கப்படும்

C) லென்சின் குவியத்தொலைவின் தலைகீழி அதன் திறன் என வரையறுக்கப் படும்

D) i என்பது படுகோணம், r என்பது விலகு கோணம் எனில் Sini/Sinr = மாறிலி

25. இவற்றில் பொருத்தமான கூற்று எது?

i. லென்சின் திறனின் SI அலகு டையாப்டர்

ii. 1 செ.மீ. குவியத்தொலைவுடைய லென்சின் திறன் 1 டையாப்டர் ஆகும்

iii. குவிலென்சின் திறன் எதிர்குறி உடையது

iv. குழி லென்சின் திறன் நேர்க்குறியுடையது

A) அனைத்தும் சரியானவை

B) i மட்டும் சரியானது

C) iv மட்டும் சரியானது

D) ii மற்றும் iii சரியானது

26. கூட்டு ஒளியிலுள்ள பல்வேறு வண்ணங்கள் தனித்தனியாகப் பிரியும் நிகழ்வு

A) நிறப்பிரிகை B) நிறமாலை

C) நிறங்களின் தொகுப்பு D) VIBGYOR

27. கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமான கூற்று எது/எவை?

i. முப்பட்டகம் ஒன்றின் வழியே ஒளி செல்லும்போது, வெவ்வேறு நிறமுடைய ஒளிக்கதிர்கள் வெவ்வேறு கோண அளவு விலகலடையும்

ii. சிவப்பு வண்ண ஒளி மிக அதிக அளவு விலகலடையும்

iii. ஊதா வண்ண ஒளி மிக குறைந்த அளவு விலகலடையும்

A) மூன்றும் சரியானவை B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது D) iii மட்டும் சரியானது

28. விண்மீன்கள் மின்னுதல் இதனால் தோன்றுகிறது

A) சிறிய அளவிலான வளிமண்டல ஒளிவிலகல்

B) பெரிய அளவிலான வளிமண்டல ஒளிவிலகல்

C) ஒளிவிலகல் எண் சமமானதாக உள்ளது

D) ஒளிவிலகல் எண் வேறுபாடடைந்து உள்ளது

29. கீழ்க்கண்டவற்றுள் எது/எவை சரியான கூற்று?

i. மனிதக் கண் ஒரு ஒளிப்படக் கருவியை போன்றதாகும்

ii. கண்ணின் லென்ஸ் அமைப்பு விழி வெண்படலம் எனப்படும்

iii. ஒளி கார்னியா எனப்படும் விழித்திரை வழியாகக் கண்ணில் நுழைகிறது

A) மூன்றும் சரியானவை B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது D) iii மட்டும் சரியானது

30. விழிக்கோளம் ஏறத்தாழ ........................ விட்டமுடைய கோள வடிவ அமைப்பைக் கொண்டது

A) 1. 3 செ.மீ. B) 1. 8 செ.மீ.

C) 2. 3 செ.மீ D) 2. 7 செ.மீ.

31. இவற்றில் சரியான கூற்று எது/எவை?

i. கார்னியாவுக்குப் பின்னால் ஐரிஸ் எனப்படும் அமைப்பு உள்ளது

ii. ஐரிஸ் என்பது கண் பார்வையைக் கட்டுப் படுத்துகின்ற இருண்ட தசைப்படலமாகும்

iii. சிலியரித் தசைகள் கண்ணில் நுழைகின்ற ஒளியின் அளவைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு படுத்துகின்றது

A) மூன்றும் சரியானவை

B) i மட்டும் சரியானது

C) i மற்றும் ii சரியானவை

D) ii மற்றும் iii சரியானவை

32. இவற்றில் சரியான கூற்று எது/எவை?

i. மையோபியா குறைபாடுள்ள ஒருவர் அண்மையிலுள்ள பொருட்களைத் தெளிவாக காண இயலும்

ii. ஹைபர்மெட்ரோபியா என்பது கிட்டப்பார்வை எனப்படும்

iii. ஹைபர்மெட்ரோபியா உடையவரின் கண்ணில் தொலைபொருளின் பிம்பம் விழித்திரைக்கு முன்பாகவே தோற்றுவிக்கப்படுகிறது

A) மூன்றும் தவறானவை

B) மூன்றும் சரியானவை

C) i மற்றும் ii சரியானவை

D) ii மற்றும் iii சரியானவை

33. கீழ்க்காணும் கூற்றுகளில் எது/எவை சரியானது?

i. ஹப்பிள் தொலைநோக்கி 1990 விண்ணில் செலுத்தப்பட்டது

ii. எட்வின் ஹப்பிள் என்ற அமெரிக்க வானாய்வாளர் பெயர் இதற்கு சூட்டப்பட்டது

iii. ரஷ்யாவின் மிர் மற்றும் அமெரிக்காவின் நாசா ஆகியவற்றின் கூட்டுமுயற்சியால் ஏவப்பட்டதாகும்

iv. மைய கருத்துகள் எல்லா விண்மீன் திறள்களின் மையங்களுக்கும் பொதுவானதாகும் என தெரிவித்தது

A) அனைத்தும் சரியானவை

B) i மற்றும் ii சரியானவை

C) ii மற்றும் iii சரியானவை

D) iii மற்றும் iv சரியானவை

34. தன் வழியே பகுதியாக ஒளியைச் செல்ல அனுமதிக்கும் பொருட்கள்

A) ஒளிபுகும் பொருள்கள்

B) ஒளிபுகாப் பொருட்கள்

C) ஒளி கசியும் பொருட்கள்

D) நிழல்கள்

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | C | 2. | D | 3. | D | 4. | C | 5. | B | 6. | A | 7. | D | 8. | D | 9. | C | 10. | C | 11. | D | 12. | B |
| 13. | A | 14. | A | 15. | D | 16. | C | 17. | D | 18. | A | 19. | A | 20. | A | 21. | C | 22. | B | 23. | C | 24. | B |
| 25. | B | 26. | A | 27. | B | 28. | B | 29. | B | 30. | C | 31. | C | 32. | A | 33. | B | 34. | C | | | | |

R.Ajith

# ஒலியியல்

1. 20,000 ஹெர்ட்ஸூக்கு அதிகமான அதிர்வெண் கொண்ட ஒலி

A) குற்றொலி B) மீயொலி

C) ஒலி இரைச்சல் D) ஒலிமூலம்

2. கண்ணாடி ஒளிஇழை .................. தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது

A) மீயொலி

B) ஒலி மூலம்

C) முழு அக எதிரொலிப்பு

D) ஒளி விலகல்

3. இவற்றில் தவறான கூற்று எது?

A) ஒலியானது ஒலிமூலத்திலிருந்து கேட்குநருக்கு ஊடகத்தின் வழியே பரவுகிறது

B) அதிர்வுறும் பொருள்களின் முன், பின் இயக்கத்தின் காரணமாக ஒலி அலை பரவுகிறது

C) எந்த பொருளின் வழியே ஒலியலைகள் பரவுகின்றனவே அதற்கு ஊடகம் என்று பெயர்

D) ஊடகமானது திடப்பொருளை மட்டுமே குறிக்கும்

4. ஒலி வெற்றிடத்தின் வழியே பரவாது என நிரூபித்தவர்

A) கெல்வின்

B) சார்லஸ்

C) இராபர்ட் பாயில்

D) ஜேம்ஸ் பிரிஸ்கோட் ஜூல்

5. ஊடகத்துகள்கள் அலைபரவும் திசைக்கு செங்குத்தான திசையில் அதிர்வுறுவதால் உருவாகும் அலைகள்

A) நெட்டலைகள் B) குறுக்கலைகள்

C) ஒலி அலைகள் D) இவை அனைத்தும்

6. இவற்றில் நெட்டலைகள் எது?

A) நீரலைகள்

B) இழுத்துக்கட்டப்பட்ட கம்பியின் அதிர்வுகள்

C) ஒலி அலைகள்

D) நீரின் மேற்பரப்பில் உருவாகும் அலைகள்

7. நடுநிலைப்புள்ளியிலிருந்து கீழ்நோக்கு திசையில் ஊடகத்துகளின் பெரும இடப்பெயர்ச்சி

A) நெருக்கம் B) நெகிழ்வு

C) முகடு D) அகடு

8. இவற்றில் குறுக்கலைகள் பற்றிய தவறான கூற்று எது?

A) முகடுகள், அகடுகள் உருவாகின்றன

B) நெருக்கமும் நெகிழ்வுகளும் உருவாகின்றன

C) திட மற்றும் திரவ மேற்பரப்பின் வழியே பரவுகின்றன

D) ஊடகத்துகள்கள், அலை பரவும் திசைக்குச் செங்குத்தாக அதிர்வுறுகின்றன

9. இவற்றில் நெட்டலைகள் பற்றிய சரியான கூற்று எது?

A) ஊடகத்துகள்கள் அலைபரவும் திசைக்கு இணையின் திசையில் அதிர்வுறுகின்றன

B) நெருக்கமும் நெகிழ்வும் உருவாகின்றன

C) திட, திரவ மற்றும் வாயுக்களின் வழியே பரவுகின்றன

D) இவை அனைத்தும்

10. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) வீச்சு - ஜூல்

B) அலைவு காலம் - ஹெர்ட்ஸ்

C) அதிர்வெண் - வினாடி

D) அலைநீளம் - மீட்டர்

11. நடுநிலைப் புள்ளியிலிருந்து துகள் அடையும் பெரும இடப்பெயர்ச்சி

A) வீச்சு B) அலைவு நீளம்

C) அதிர்வெண் D) அலைநீளம்

12. இடி மின்னலின்போது மின்னல் கீற்று முதலில் புலப்படுவதேன்?

A) ஒளியின் திசைவேகம் ஒலியின் திசை வேகத்தைவிட மிக அதிகம்

B) ஒளியானது ஒலியைவிட மில்லியன் மடங்கு வேகமாகச் செல்கிறது

C) ஒளியின் திசைவேகம் ($3 \times 10^8$ மீ/வி) ஆனது ஒலியின் திசைவேகம் (340 மீ/வி)மிக அதிகம்

D) இவை அனைத்தும்

13. இவற்றில் எது எதிரொலிப்புக்கு காரணமாக அமைகிறது?

A) காடுகள் B) மலைகள்

C) கட்டடங்கள் D) இவை அனைத்தும்

14. இவற்றில் எதிரொலி பற்றிய சரியான கூற்று எது?

A) கேட்டலின் நீட்டிப்பு காரணமாக நமது மூளையில் ஒலியானது ஒரு விநாடியில் 1/10 பங்கிற்கு ஒலி தொடர்ந்து உணரப்படுகிறது

B) எதிரொலிப்பு மூலமாக நம்மை வந்தடையும் எந்த ஒரு ஒலியும் 1/10 வினாடியில் 34 மீ தொலைவு பயணம் செய்திருக்கும்

C) எதிரொலி கேட்கப்படவேண்டுமெனில் ஒலியை எதிரொலிப்பு அடையசெய்யும் தடைபொருளானது குறைந்தது 17 மீ தொலைவில் அமைய வேண்டும்

D) இவை அனைத்தும்

15. இவற்றில் எதிர்முழக்கம் பற்றிய தவறான கூற்று எது?

A) பன்முக எதிரொலிப்பின் காரணமாக, ஒலி கேட்டல் நீடித்திருக்கும் தன்மை எதிர்முழக்கம் எனப்படும்

B) எதிர்முழக்க நேரம் ஒரு குறிப்பிட்ட உகந்த மதிப்பைவிட அதிகமாக இருத்தல் வேண்டும்

C) எதிர்முழக்க நேரமானது பேச்சிற்கு 0.5 விநாடியும், இசைக்கு 1 முதல் 1. 5 விநாடியும் இருத்தல் வேண்டும்

D) ஒலி உட்கவரும் தன்மை பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது

16. ஒலி பற்றிய சரியான கூற்று எது?

A) ஒலியானது அதிர்வுறும் பொருள்களால் உருவாகின்றது

B) 20Hz முதல் 20,000Hz வரை மனிதனால் கேட்க முடியும்

C) 1Hz = சுற்று/வினாடி

D) இவை அனைத்தும்

17. இவற்றில் பொருத்தமற்ற இணையைக் காண்க.

A) 20Hz - 20,000Hz - மனிதன் செவியுணர் நெடுக்கம்

B) 20,000Hzக்கும் அதிகமான அதிர்வெண் கொண்ட ஒலி–மீயொலி

C) 20Hzக்கும் குறைவான அதிர்வெண் கொண்ட ஒலி - குற்றொலி

D) மனிதனால் மீயொலியை கேட்க முடியாது. குற்றொலியை கேட்க முடியும்

18. ஹென்றி ரூடால்ப் ஹெர்ட்ஸ் பற்றிய தவறான கூற்று எது?

A) முதன்முதலாக ரேடியோ அலைகளை ஆய்வின் மூலம் நிரூபித்தார்

B) திரவங்களின் ஆவியாதல் பற்றியும் ஆய்வு செய்துள்ளார்

C) அணு இயற்பியலில் கதிரியக்க ஆய்வு செய்தார்

D) அதிர்வெண் அலகு = சுற்றுகள்/விநாடி இவரது பெயராலேயே ஹெர்ட்ஸ் என்ற அலகாக மாற்றப்பட்டது

19. 1000Hz முதல் 1,00,000Hz வரை கேட்கும் திறன் கொண்டது

A) நாய் B) பூனை C) பசு D) முயல்

20. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) 40Hz - 46,000Hz - கடல்நாய்

B) 100Hz - 32,000Hz - பசு

C) 1000Hz - 1, 50,000Hz - வெளவால்

D) 16Hz - 12,000Hz - டால்பின்கள்

21. மீயொலி வரிக்கண்ணோட்டம் என்பது

A) நடைமுறையில் உள்ள கருவில் உள்ள சிசுவினை ஆய்வு செய்யும் பாதுகாப்பான முறை

B) தீங்கு விளைவிக்காத ஆய்வு முறை

C) பாதுகாப்பான ஆய்வு முறை

D) இவை அனைத்தும்

22. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

I. கிறிஸ்டியன் ஜோஹன் டாப்ளர் என்பவர் டாப்ளர் விளைவைக் கண்டறிந்தார்

II. டாப்ளர் விளைவு சூரியனிலிருந்து வரும் வெள்ளொளி பற்றிய ஆய்வாகும்

III. ஒலிமூலம் இயக்கத்தில் உள்ளபோது, அது உருவாக்கும் ஒலியின் சுருதியில் தோற்ற மாற்றம் ஏற்படும் என்ற கருத்தினை வெளியிட்டார்

IV. டாப்ளர் கருத்து சூரிய கதிரியக்கம் பற்றிய சிறந்த ஆய்வாகும்

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

A) I மற்றும் III சரியானவை

B) II மற்றும் III சரியானவை

C) III மற்றும் IV சரியானவை

D) I மற்றும் IV சரியானவை

23. இவற்றில் எங்கு டாப்ளர் விளைவு இடப்பெயர்ச்சி பயன்படுத்தப்படுகிறது

A) போக்குவரத்து கட்டுப்பாட்டில்

B) வானூர்தி நிலையத்தில்

C) வெளவால்கள் இரையைத்தேட

D) இவை அனைத்தும்

24. இவற்றில் தவறான கூற்று எது?

A) டாப்ளர் விளைவு தத்துவத்தின் அடிப்படையில் ரேடார் கருவி செய்யப்படுகிறது

B) நீர்மூழ்கிக்கப்பல் மற்றும் வானூர்திகளின் இயக்கம் மற்றும் திசைவேகம் கண்டறியப்படுகிறது

C) யானைகள் டாப்ளர் விளை பயன்படுத்தி நீரை தேடுகின்றன

D) டாப்ளர் இடப்பெயர்ச்சியின் மூலம் வௌவால்கள் இரையின் தொலைவை அறிந்து கொள்கிறது

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. B | 2. C | 3. D | 4. C | 5. B | 6. C | 7. D | 8. B | 9. D | 10. D | 11. A | 12. D |
| 13. D | 14. D | 15. B | 16. D | 17. D | 18. C | 19. D | 20. C | 21. D | 22. A | 23. D | 24. C |

# அணு இயற்பியல்

1. கூற்று (A) : அணுக்கரு பிளவின்போது அதிக அளவு ஆற்றல் வெளிப்படுகிறது

கூற்று (R) : கனமான அணுக்கரு, குறைவேக நியூட்ரான் கொண்டு தாக்கப்படும் போது, லேசான அணுக்கருக்களாகப் பிளவுபடக்கூடும்.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி. மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமாகும்

B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி. ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி

2. இவற்றில் எது/எவை சரியான கூற்று?

i. அணுக்கரு உலையில், கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நிலைநிறுத்தப்பட்ட அணுக்கரு பிளவு தொடர்வினை ஆற்றலை வெளியிடுகிறது

ii. வெளிப்படும் ஆற்றல் நீராவியை உருவாக்கி மின்னாற்றலை உற்பத்தி செய்கிறது.

iii. மூல உட்கருவின் நிறை, உருவான உட்கருக்களின் நிறைகளின் கூடுதலைவிட சிறிது அதிகம்.

A) மூன்றும் சரியானவை

B) ii மட்டும் சரியானது

C) iii மட்டும் சரியானது

D) i மட்டும் சரியானது

3. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) ஹென்றி பெக்காரல் - அயனியாக்கம்

B) ரூதர்ஃபோர்டு - கதிரியக்கம்

C) மேரி கியூரி - ரேடியம்

D) பியரி கியூரி - மின்புலம்

4. இவற்றில் தவறான கூற்று எது?

A) கதிர்வீச்சை வெளியிடும் பொருள்கள் கதிரியக்கத் தனிமங்கள் எனப்படும்

B) வெப்பநிலை அழுத்தம், காந்த மற்றும் மின்புலங்கள் போன்றவற்றால் கதிரியக்கம் பாதிக்கப்படும்

C) பொருளின் மூன்றுவகை கதிர்வீச்சுகள் ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள்

D) கதிரியக்கம் கண்டறிந்தவர் ஹென்றி பெக்காரல்

5. அணுக்கரு பிளவை கண்டறிந்தவர்

A) ஆட்டோஹான்    B) ஸ்ட்ரோஸ்மேன்

C) ஐன்ஸ்டீன்    D) A மற்றும் B

6. **கூற்று** (A) : மிக கனமான அணுக்கரு, பேரளவு ஆற்றல் வெளியீட்டுடன் இரு துண்டுகளாக பிளக்கப்படும் செயல்முறை அணுக்கருப் பிளவு என்றழைக்கப்படுகிறது.

**கூற்று** (R) : அணுக்கருப் பிளவு நியூட்ரான் வெளியீட்டோடு இணைந்ததாகும்

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி. மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமாகும்

B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி. ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி

7. இவற்றில் எது/எவை சரியான கூற்று?

i. அணுக்கரு இணைவுக்கு முன் லேசான அணுக் கருக்களின் வெப்பநிலை பல மில்லியன் டிகிரி உயர்ந்திருக்க வேண்டும்

ii. அணுக்கரு இணை வினை மின்காந்த அணுக்கரு வினைகள் எனப்படுகிறது

iii. உருவாகும் உட்கருவின் மின்விசை லேசான அணுக்களின் மின்விசையைவிட அதிகமாக இருக்கும்

A) மூன்றும் சரியானவை  B) i மட்டும் சரியானது

C) iii மட்டும் சரியானது  D) ii மட்டும் சரியானது

8. ஐன்ஸ்டீன் .............. தொடர்பின்படி நிறை வேறுபாடு ஆற்றலாக மாற்றப்படுகிறது

A) சார்பியல் கொள்கை

B) நிறை ஆற்றல் கொள்கை

C) குவாண்டம் கொள்கை

D) மின்காந்தக் கொள்கை

9. ஹைட்ரஜன் குண்டு பற்றிய தவறான கூற்று எது?

A) ஹைட்ரஜன் குண்டின் அணுக்கரு இணைவு வினையானது

B) இது பேரளவு வெப்ப ஆற்றலை வெளியிடுகிறது

C) கட்டுப்படுத்தப்பட்ட முறையில் கனமான அணுக்கருக்களின் பிளவை சாதகமான வெப்பநிலை

துவக்குகிறது

D) அணுகுண்டு வெடித்த உடனே டியூட்ரான் மற்றும் டிரிட்டானின் பொருத்தமான சேர்ப்பு ஒன்றிணைக்கப்படுகிறது

10. அணுக்கரு உலை ஆபத்தான நிலையில் எப்போது இருக்கும்?

A) அணுக்கரு உலையானது முழுவீச்சில் செயல்படும்போது அதில் உருவாக்கப்பட்ட நியூட்ரான் களின் எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்ட நியூட்ரான்களின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும்போது

B) அணுக்கரு வினையானது சுழியாக இருக்கும்போது

C) அணுக்கரு வினை நேர்க்குறியாக உள்ளபோது

D) அணு உலைக்கு எதிராக உதயகுமார் போராட்டத்தை அறிவிக்கும்போது

11. இவற்றில் சரியான கூற்று எது/எவை?

i. ஆல்பா, பீட்டா, காமா கதிர்வீச்சுகள் யாவும் அயனியாக்கத்தை உருவாக்கும் கதிர்வீச்சுகள்

ii. இந்தக் கதிர்வீச்சுகள் உயிர்செல் மூலக்கூறுகளின் அமைப்பை மாற்றும் திறன் கொண்டவை

iii. இதனால் உயிரியல் அமைப்பின் வழக்கமான செயல்பாடு எவ்விதத்திலும் மாறுபாட்டுக்கு உட்படுவதில்லை

A) மூன்றும் சரியானவை

B) i மற்றும் ii சரியானவை

C) ii மற்றும் iii சரியானது

D) iii மட்டும் சரியானது

12. இவற்றில் கதிர்வீச்சு பற்றிய தவறான கூற்று எது?

A) கதிர்வீச்சின் அளவு ராண்ட்ஜன் என்ற அலகால் அளவிடப்படுகிறது

B) ஒரு கிராம் காற்றில் 1. 6 $\times$ $10^{12}$ ஜோடி அயனிகளை உருவாக்கும் கதிர்வீச்சின் அளவு ஒரு ராண்ட்ஜன்

C) கதிர்வீச்சின் பாதுகாப்பு எல்லை ஒரு வாரத்திற்கு 500 மில்லி ராண்ட்ஜன் ஆகும்

D) கதிர்வீச்சு பாதிப்புகள் நோயை உண்டாக்கலாம் அல்லது ஜீன்களைப் பாதிக்கலாம்

13. கதிர்வீச்சு ஆய்வகங்களில் பணியாற்று பவர்கள் இவற்றில் எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை பின்பற்றுவதில்லை?

A) கதிரியக்க பொருள்கள் தடித்த சுவர் கொண்ட காரிய கலன்களில் வைப்பது

B) ஒரு சிறிய நுண்ணிய - ஒளிப்படத்தாள் பட்டை பணிபுரிபவர்கள் அணிவது

C) பணிபுரிபவர்கள் அலுமினிய மேலங்கியும், அலுமினிய கையுறையும் பயன்படுத்துதல்

D) அணுக்கரு சாதனங்கள் தொலைக் கட்டுப்பாட்டு முறையில் கையாளப்படுதல்

1. A 2. A 3. C 4. B 5. D 6. B 7. B 8. B 9. C 10. C 11. B 12. C 13. C